## சொட்டுநீர் பாசன முறையில்

# மெட்ரோ ரயில் நிலையங்களின் தூண்களில் செங்குத்து தோட்டம்

## நிர்வாகம் புதுமுயற்சி

சென்னை, ஜூலை 3: சொட்டு நீர் பாசன முறையில் பிளாஸ்டிக் கழிவுகளை கொண்டு மெட்ரோ ரயில் நிலையங்களின் தூண்களில் செங்குத்து தோட்டம் அமைக்கும் புது முயற்சியில் மெட்ரோ ரயில் நிர்வாகம் இறங்கியுள்ளது. முதல்கட்டமாக கோயம்பேடு மெட்ரோ ரயில் நிலையத்தில் இதை அமைத்துள்ளது.

இதுகுறித்து, மெட்ரோ ரயில் நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பு:

சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் கிரிக்கோ என்ற மறுசுழற்சி நிறுவனத்தின் உதவியுடன் பிளாஸ்டிக் கழிவுகளை கொண்டு தூண்களில் பசுமையான செடிகளை வளர்க்க உள்ளது. இது, தற்போது கோயம்பேடு மெட்ரோ ரயில் நிலையத்தின் வாகன நிறுத்தும் இடத்தில் உள்ள தூண்களில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த தூணில் 400 பிளாஸ்டிக் பாட்டிகள் மூலம் மொத்தம் 1,250 செடிகளை கொண்டு செங்குத்து தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கு சொட்டுநீர் பாசன முறையில் தண்ணீர் விடப்படுகிறது. இந்த செங்குத்து தோட்டம் கார்பன்-டை-ஆக்சைடை உறிஞ்சி காற்று மாசுபாட்டை தவிர்க்கும். இதேபோல், நல்ல சுத்தமான காற்றை வெளியில் விடும். இதேபோல், மற்ற மெட்ரோ ரயில் நிலையங்களில் உள்ள தூண்களிலும் இதை அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு கூறப்பட்டுள்ளது.